சட்டம் ஒழுங்குச் சீர்கேடு - பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பின்மை – விலைவாசி உயர்வைக் கண்டித்து

தி.மு.க. மகளிர் அணி சார்பில் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி.

– கழக மகளிர் அணி நிர்வாகிகள் பங்கேற்பு!



சென்னை, அக்.31–

சட்டம் ஒழுங்குச் சீர்கேடு – பெண்கள் – குழந்தைகள் பாதுகாப்பின்மை– மற்றும் விலைவாசி உயர்வைக் கண்டித்து தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், இன்று (31.10.2026) நடைபெறுகிறது.

சென்னை வடக்கு மாவட்டத்தில் நடை பெறும் மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்கிறார்.

இம்மாபெரும் ஆர்ப்பாட்டம் மற்றும் இவ்வார்ப்பாட்டங் களுக்கு மாவட்டங்களில் தலைமையேற்போர் குறித்து தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு :–

தமிழகத்தில் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை ஆகியவை அதிகரித்து சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர்கேட்டு இருப்பதோடு, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் ஆகியவை மிகப்பெரிய அளவில் அதிகரித்து தமிழகத்தை பாதுகாப்பற்ற மாநிலமாக இந்த ஆட்சி கொண்டு வந்திருக்கிறது.

ஒரு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தைப் படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. மகளிர் அணியின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (31.10.2026 சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நடைபெறும் என்று தி.மு.க. தலைமைக் கழகம் அறிவித்திருந்தது.

அந்தந்த மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்கள் தலைமையில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கீழ்க்கண்டவர்கள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றுவார்கள்.

1. சென்னை வடக்கு - **கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி, வனிதா குமாரி**
2. கன்னியாகுமரி - **ஹெலன் டேவிட்சன், நாஞ்சில் சிபி**
3. சேலம் - **நாமக்கல் ராணி.**
4. தூத்துக்குடி - **கீதா ஜீவன், ஜெஸி பொன் ராணி**
5. கோயம்புத்தூர் - **வீரமணி J.K, கலாவதி**
6. திருவாரூர் - **தமிழரசி ரவிக்குமார், அஞ்சுகம் பூபதி**
7. மதுரை - **பவானி ராஜேந்திரன், வழக்கறிஞர் ஷாமிலி பிரபா,**
8. சென்னை தெற்கு - **விஜயா தாயன்பன், டாக்டர் கனிமொழி சோமு, ராணி ரவிச்சந்திரன், ரத்னா லோகேஷ்வரன், டாக்டர் யாழினி P.M**
9. காஞ்சிபுரம் - **பிரியா ராஜன், நிவேதா ஜெசிகா**
10. நாகப்பட்டினம் - **ஆண்டாள் பிரியதர்ஷினி**
11. தேனி - **திவ்யா சத்யராஜ்**
12. திருச்சிராப்பள்ளி - **விஜிலா சத்யானந்த், கவிதா**
13. கள்ளக்குறிச்சி - **ரேகா பிரிய தர்ஷினி, டாக்டர் மலர்விழி,**
14. செங்கல்பட்டு - **சேலம் சுஜாதா**
15. கடலூர் - **அங்கையற்கண்ணி**
16. தஞ்சாவூர் - **காரல் மார்க்ஸ், அனிச்சம் கனிமொழி**
17. கிருஷ்ணகிரி - **சுஜாதா, ஸ்ரீலேகா**
18. அரியலூர் - **A.ரியா**
19. ஈரோடு - **நாக நந்தினி, கலைசெல்வி**
20. இராணிப்பேட்டை - **அமுலு விஜயன்**
21. கரூர் - **நிரஞ்சனா செந்தில்குமார், கவிதா கல்யாண சுந்தரம்**
22. திருப்பத்தூர் - **கவிதா தண்டபாணி, ராஜராஜேஸ்வரி**
23. திருப்பூர் - **மாலதி நாகராஜ், கயல்விழி செல்வராஜ், சத்யா பழனிக்குமார், உமா மகேஷ்வரி,**
24. திருவண்ணாமலை - **T.R. காயத்ரி**
25. பெரம்பலூர் - **மகாதேவி ஜெயபால்**
26. புதுக்கோட்டை - **கலைமணி பாரதி, தெய்வானை, உஷா ராணி**
27. மயிலாடுதுறை - **தீன்ஷா**
28. விருதுநகர் - **வழக்கறிஞர் ஸ்ரீநிதி,**
29. விழுப்புரம் - **தேன்மொழி, பெனாசீர்**
30. வேலூர் - **டாக்டர் மாலதி**
31. தென்காசி - **சாஷா, திவ்யா மணிகண்டன்**
32. தர்மபுரி - **ரோஜா**
33. திண்டுக்கல் - **கிருத்திகா தங்கபாண்டி, லக்ஷிகா வேலுமணி, சித்ரா**
34. திருநெல்வேலி - **முத்துசெல்வி, ரஹீமா**
35. திருவள்ளூர் - **டாக்டர் கிருத்திகா**
36. நாமக்கல் - **டாக்டர் கோகிலாமணி**
37. நீலகிரி - **வைஷ்ணவி**

இவ்வாறு அந்த அறிவிப்பில் தலைமைக் கழகம் தெரிவித்துள்ளது.



அண்ணாநகர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மறைந்த மிசா சோ.மா.இராமச்சந்திரன் அவர்களின் உடல் மீது கழக இளைஞர் அணிச் செயலாளர் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர்மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

அண்ணாநகர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

மிசா சோ.மா.இராமச்சந்திரன் மறைவு!

சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் – தயாநிதி மாறன் – நே.சிற்றரசு – கலாநிதி வீராசாமி – எம்.கே.மோகன் அஞ்சலி செலுத்தினர்!

சென்னை, அக்.31 -

அண்ணா நகர் தொகுதியின் முன் னாள் சட்டமன்ற உறுப்பினரும், தலைமை செயற்குழு உறுப்பினரும், ஒருங்கிணைந்த அண்ணா நகர் பகு தியின் 25 ஆண்டு கால பகுதிக் கழகச் செயலாளரும், கழகத்தின் மூத்த முன்னோடி மிசா சோ.மா.இராமச் சந்திரன் (வயது 100) நேற்று (30.10.2026 - வெள்ளிக்கிழமை) மதி யம் 1.30 மணியளவில் இயற்கை எய் தினார் என்பதை அறிவிக்க வருந்து கிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந் ததும் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க் கட்சி தலைவரும், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே. சிற்றரசு, மத்திய சென்னை நாடாளு



மன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வடசென்னை நாடாளுமன்ற உறுப் பினர் கலாநிதி வீராசாமி, அண்ணா நகர் சட்டமன்ற முன்னாள் உறுப்பி னர் எம்.கே.மோகன், அண்ணாநகர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், அண்ணாநகர் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் ந.இராம லிங்கம், வட்டக் கழக செயலாளர் கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு அன்னாரின் உடலுக்கு மலர் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த அவருக்கு மிசா சோ. மா.இராமச்சந்திரன் அவர்களுக்கு ஒரு மகள் உள்ளார்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (31.10.2026 - சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு அரும்பாக்கம் இடுகாட்டில் நல்ல டக்கம் செய்யப்படுகிறது.

சென்னை தெற்கு – மேற்கு – தென்மேற்கு மாவட்டங்களின் மகளிர் அணி – மகளிர் தொண்டர் அணி சார்பில் சேப்பாக்கத்தில்

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, விலைவாசி உயர்வு, கொலை, கொள்ளைகளைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

மாவட்ட கழக செயலாளர்கள் மா.சுப்பிரமணியன் – நே.சிற்றரசு – மயிலை த.வேலு அழைப்பு!







சென்னை,அக்.31-

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, விலைவாசி உயர்வு, கொலை, கொள்ளை களைக் கண்டித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, சென்னைத் தெற்கு, சென்னை மேற்கு மற்றும் தென்மேற்கு மாவட்ட மக ளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பில் மாபெரும் கண் டன ஆர்ப்பாட்டம் சேப்பாக் கம் சுவாமி சிவானந்தா சாலை யில் இன்று (31.10.2026) காலை 10 மணியளவில் நடை பெற உள்ளது.

"தமிழ்நாட்டில் விலைவாசி உயர்ந்திருக்கிறது' என்கிற உண்மையை உடைத்துச் சொன்னதற்காக பொருளா தார ஆய்வாளர் சிறந்த பொரு ளாதார ஆய்வாளரும், பன் னாட்டுப் பல்கலைக்கழக ங்களில் ஆய்வு நிகழ்த்துப வரும், எம்.அய்.டி.எஸ். பேரா சிரியரும், நூற்றாண்டு திரா விட இயக்கம் உருவாக்கிய பொருளாதாரக் கட்ட மைப்பை ஆய்வு செய்து, மறுக்க முடியாத சான்றுகளு டன் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்க ழகத்தால் வெளியிடப்பட்ட 'The Dravidian Model: Interpreting the Political Economy of Tamil Nadu' (திராவிட மாடல்: தமிழ் நாட்டின் அரசியல் பொருளா தாரத்தை விளக்குதல்) என்ற புத்தகம் எழுதியவர்களில் ஒரு வருமான முனைவர் ஆ.கலை யரசன், கைது செய்யப்பட்டு அலைக்கழிக்கப்பட்டிருக்கி றார். இந்திய அரசியலமைப் புச் சட்டம் உறுதி செய்யும் கருத்துச் சுதந்திரத்தைப் பறிக் கும் அடாவடித்தனத்தை தரங் கெட்ட த.வெ.க. அரசு செய் தியிருக்கிறது.

படுகொலைகள் - பாலியல் வன்கொடுமைகள் - ஆள் கடத்தலில் குழந்தை களும்கூட. சிறையிலிருந்து தப்பித்தல் - விலைவாசி உயர் வால் வெறுப்புக்கு உள்ளாகும் பிரச்சினைகளிலிருந்து திசை திருப்பி, திமிழ்நாட்டைப் படு பாதாளத்தில் தள்ளிவிட்டிருக் கிறார் தற்போதைய தமிழ் நாடு முதலமைச்சர். மக்களின் பாதுகாப்புக்கும், நிம்மதியான வாழ்க்கைக்குமான சூழல் என் பது கேள்விக்குறியாகியுள்ளது.

கொலைகள், கொள்ளை கள், கடத்தல்கள், போதை மருந்து புழக்கங்கள், பாலியல் வன்கொடுமைகள் மற்றும் வர லாறு காணாத மின்வெட்டு. மக்கள் மீதான விலைவாசி ஏற் றம். வெட்டிக் கொல்வது தொடர்கதையாகி இருக்கி றது.

கடந்த மாதம் திருவொற்றி யூரில் ஒருவர், தன் உயிருக்குப் பாதுகாப்பு கோரிய 24 மணி நேரத்திற்குள் (செப்.9 அன்று) நடுச் சாலையில் வெட்டிக் கொலை செய்யப்படுகிறார். செப்.6 த.வெ.க. நிர்வாகி ஒரு வர் பெசன்ட் நகரில் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஒரு கும்பலால் வெட் டிக் கொல்லப்படுகிறார்.

அக்.18 அன்று சிவகங்கை மாவட்டம் ஒக்கூரில் ஒருவர் ஓட ஓட வெட்டிக் கொலை செய்யப்படுகிறார். அக்.26 அன்று சேலத்தில், புதுரோடு மேம்பாலம் அருகில், அய்ந்து பேர் கொண்ட கும்பல் ஒரு வரை வெட்டிக் கொலை செய் கிறது. சென்னையிலேயே அடையாறு இந்திரா நகர் பகு தியில் அக்.27 பட்டப்பகலில் ஒரு கொலை நடக்கிறது. காவல்நிலையத்தில் கையெ ழுத்துப் போட வந்த ஒருவரை மூன்று பேர் கும்பல் வழிம றித்து வெட்டிக் கொன்றுள் ளது

இவையெல்லாம் தற்செய லாக நடக்கும் நிகழ்வுகள் அல்ல; திடீர் கோபத்தில், ஆற் றாமையில் நடக்கும் கொலை கள் அல்ல. திட்டமிட்டு, நோட்டமிட்டு இக் கொலை கள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இவை அனைத்திலும் கொலை செய்யப்பட்டோர், கொலை செய்தோர் அனைவரும் குற் றப் பின்னணி கொண்டவர் கள்.

இன்னொரு புறம், செஞ்சி, இராணிப்பேட்டை, சாத் தான்குளம் என்று குழந்தை கள் கடத்தல் நிகழ்வுகள், எண் ணூர், நாகை, திருநெல்வேலி பாலியல் வன்கொடுமைகள், கோவையில் ஜாதி வன்கொடு மையால் மாணவர் தற் கொலை, போதை மருந்துக் கடத்தல்கள், போதை கும்ப லுக்கிடையே வன்முறை கொலை என செய்தித்தாள்க ளையும், தொலைக்காட்சிகளையும் திறந்தாலே இவைதான் பேசப் படுகின்றன. கடத்தல்களில் போதை மருந்து கடத்தல் போல, குழந்தைகள் கடத்த லும் தொடர்கிறது.

இதனிடையே புழல் சிறை யிலிருந்து இரு கைதிகள் தப்பி யோடி, பின்னர் பிடிபட்டனர் என்றொரு செய்தி. 26.10.2026) தேனி கிளைச் சிறையிலிருந்து 17 கைதிகள் தப்பியோடியுள் ளனர். அவர்களில் பலரைப் பிடித்துவிட்டதாகக் காவல் துறை தெரிவித்தாலும், உயர் பாதுகாப்பு கொண்ட சிறைக ளிலிருந்து, தப்புகின்ற அள வுக்கு எங்கே ஓட்டைகள் இருக்கின்றது. மக்களோ அன் றாட வாழ்க்கை குறித்த அச்சத் தில் ஆழ்ந்துள்ளனர். விலை வாசி பல மடங்கு உயர்ந்து, அதுவேறு புறம் அச்சுறுத்துகி றது.

இந்தப் பிரச்சினைகளில் இருந்தெல்லாம் செய்தி ஊட கங்களைத் திசை திருப்பு, வேறு வேறு பிரச்சினைகளை முன்னிறுத்துவதும், முன்னாள் அமைச்சர்கள் கைது, அவதூறு வழக்குகள், விசாரணைகள், ரெய்டுகள் என்று கட்டவிழ்த் துவிட்டிருக்கிறது த.வெ.க. அரசு.

இந்த அராஜகப் போக்கை யெல்லாம் கண்டித்து மாவட்ட மகளிர் அணி, மக ளிர் தொண்டர் அணி சார்பில் நடைபெறும் கண்டன ஆர்ப் பாட்டத்தில் சென்னைத் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட மக ளிர் அணி துணைச் செயலா ளர்கள், மாவட்ட அமைப்பா ளர்கள், பகுதி, வட்ட துணைச் செயலாளர்கள் (மகளிர்), மக ளிர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட மக ளிர் அணி துணை அமைப்பா ளர்கள், மகளிர் தொண்டர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் (மகளிர் மகளிர் தொண்டர் அணி) அமைப்பா ளர்கள், துணை அமைப்பாளர் கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் பங்கேற்று ஆர்ப் பாட்டத்தை வெற்றிக்கர மாக நடத்திடுமாறு சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன், மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தென்மேற்கு மாவட்டச் செயலாளர் த. வேலு ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.